MAALAI MALAR 20 AUG 09

### ஈஷா யோகா மையம் சார்பில்

# திருப்பூர் நகரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம்

## மு.க.ஸ்டாலின் 23-ந்தேதி தொடங்கி வைக்கிறார்

திருப்பூர், ஆக. 20-

ஈஷா நிறுவனத்தின் பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில் திருப்பூர் நகரத்தில் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா வருகிற 23-ந் தேதி(ஞாயிற்றுக்கிழமை) திருப்பூரில் நடைபெறுகிறது.

**மு.க.ஸ்டாலின்**

இதற்கான தொடக்க விழா 23-ந்தேதி திருப்பூர் டவுன்ஹால் மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறுகிறது. விழாவில் தமிழக துணை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு முதல் மரக்கன்று நட்டு விழாவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பூங்கோதை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் சாமிநாதன், திருப்பூர் மாநகர மேயர் செல்வராஜ், துணை மேயர் செந்தில்குமார், திருப்பூர் எம்.எல்.ஏ.கோவிந்தசாமி, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க தலைவர் சக்திவேல், வளம் அமைப்பு கிருஷ்ணசாமி, சைமா தலைவர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

**மாரத்தான் ஓட்டம்**

விழாவை தொடர்ந்து காலை 8½ மணிக்கு பசுமை மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெறுகிறது. மாரத்தான் ஓட்டப்பந்தயம் திருப்பூர் டவுன்ஹாலில் தொடங்கி திருப்பூர் பழைய பஸ் நிலையத்தில் முடிவடைகிறது. ஓட்டப்பந்தயத்தை நடிகை ஸ்ரேயா மற்றும் நடிகர் பிரகாஷ்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைக்கிறார்கள்.

பின்னர் மாலை 5 மணிக்கு மரக்கன்றுகள் நடும் நிறைவு விழா டவுன்ஹால் மைதானத்தில் நடக்கிறது. ஈஷாயோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் கலந்து கொண்டு மரம் நட்டு நிறைவு விழா பேருரை ஆற்றுகிறார்.

மேற்கண்ட தகவலை ஈஷா யோகா மைய பசுமை கரங்கள் திட்ட மாநில ஒருங்கிணைப்பாளர் எத்திராஜுலு தெரிவித்தார்.